**கவனிக்க.-** *27.05.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1709 - 2011 ජූනි මස 03 වැනි සිකුරාදා - 2011.06.03**

*1709 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 670 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 671 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 676 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 670 | நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2011, யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, மே மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு துபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் மீண்டும் கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2011/2012

(கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2012 யூன் மாதம் வரை)

2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளுவிற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களுக்குமான பொது நிபந்தனைகளுக்கும் ;

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணைகளை குத்தகை விடும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும்.

2. எந்தவொரு பிரதேசச் செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிய படிவத்தில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புப்பணமாக மாதம்பை பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு அதன் இடப்பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு “13 ஆம் இலக்கமுள்ள பம்பல கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்” என குறிப்பிடப்பட்டு 2011.06.07 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு மாதம்பை பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், மாதம்பை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைக் (சிலோன்) குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

5. 2011.06.07 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகமல் தவறணைகள் ஏதும் இருப்பின் இவற்றுக்கான மீள்விற்பனை 2011.06.23 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மாதம்பை பிரதேசச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். எம். எச். பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
மாதம்பை.

பிரதேச செயலகம்,
மாதம்பை.
2011.05.19.

### அட்டவணை

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 01 | பிடிகல் கோரலை பம்பல வடக்கு | பம்பல | 2011.06.07 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 1,000.00 |

6-92

## வென்னப்புவை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2011/2012

2011 ஆம் வருடம் யூலை மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2012 ஆம் வருடம் யூலை மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தயார் செய்யப்படல் வேண்டும்.

2. விண்ணப்பப்பத்திரங்கள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் தயார் செய்யப்படல் வேண்டியதோடு, அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய வைப்புக் கொள்கைப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும், விண்ணப்பிக்கும் தொகையின் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் இணைக்கப்பட்டும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''.................................. இலக்கமுடைய ...................................................... கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம்'' என கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி தவறணைக்கான இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு 2011, மே மாதம் 30 ஆந் திகதி தொடக்கம் யூன் மாதம் 06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்பு வென்னப்புவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 207, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2011.06.06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் விண்ணப்பப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயத்தில் விண்ணப்பக்காரர்கள் அனைவரும் வென்னப்புவை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத் தவறணைகள் திரும்ப விற்பனை 2011.06.22 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும் அன்றைய நாளும் விண்ணப்பங்கள் வர்த்தமானப்பத்திரத்தின்படி அமைதல் வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்கள் வென்னப்புவை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். டி. நாமரத்ன,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவை.

### அட்டவணை

| தொடர் இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புத் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01 | வென்னப்புவை பி. செ. பிரிவு | தம்பராவில் | 2011.06.06 மு. ப. 10.00 | 500.00 |
| 02 | வென்னப்புவை பி. செ. பிரிவு | நஞ்சுண்டான்கரை | 2011.06.06 மு. ப. 10.00 | 250.00 |
| 03 | வென்னப்புவை பி. செ. பிரிவு | வைக்கால் | 2011.06.06 மு. ப. 10.00 | 1,000.00 |
| 04 | வென்னப்புவை பி. செ. பிரிவு | வொரலஸ்ஸ | 2011.06.06 மு. ப. 10.00 | 500.00 |
| 05 | வென்னப்புவை பி. செ. பிரிவு | தும்மளதெனிய | 2011.06.06 மு. ப. 10.00 | 1,000.00 |
| 06 | வென்னப்புவை பி. செ. பிரிவு | லுனுவில | 2011.06.06 மு. ப. 10.00 | 500.00 |
| 07 | வென்னப்புவை பி. செ. பிரிவு | வென்னப்புவ | 2011.06.06 மு. ப. 10.00 | 2,000.00 |
| 08 | வென்னப்புவை பி. செ. பிரிவு | ஊள்கிட்டியாவ | 2011.06.06 மு. ப. 10.00 | 500.00 |
| 09 | வென்னப்புவை பி. செ. பிரிவு | நயினாமடம் | 2011.06.06 மு. ப. 10.00 | 1,000.00 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | மூடப்படும் நேரம் |
|---|---|
| மு. ப. 11.00 | பி. ப. 05.00 |
| பி. ப. 05.00 | இரவு 08.00 |

6-93

**சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2011/2012**

*2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைந்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.*

*2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடதுபக்கத்தில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு:*

*"......................................... இலக்கமுள்ள ......................................... கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2011.06.06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயல்படுதல் வேண்டும்.*

*5. 2011.06.06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அவ்வேளை கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதுமிருப்பின் இவற்றுக்கான மீள் விற்பனை 2011.06.21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய நடைபெறும்.*

*7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)*

*யூ. எஸ். என். பிரனாந்து,*
*பிரதேச செயலாளர்,*
*சிலாபம்.*

*பிரதேச செயலகம்,*
*சிலாபம்,*
*2011, மே 16.*

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | சிலாபம் ந. வட் இலக்கம் 2 | இச்சம்பிடிய | 2011.06.06 மு.ப. 10.00 | 2,000 |
| 2. | சிலாபம் ந. வட் இலக்கம் 3 | பிரிவினுள் வேறொரு இடம் தேவைப்பட்டுள்ளது | 2011.06.06 மு.ப. 10.00 | 1,000 |
| 3. | பிடிகல கோரல | ஒலிதலுவ | 2011.06.06 மு.ப. 10.00 | 250 |

6-45

## புத்தளம் மாவட்டம், நாத்தாண்டி பிரதேச செயலாளர் பிரிவில் 2011 ஆம் ஆண்டு ஆடி 1 ஆந் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரைக்கான கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும்

2011 ஆம் ஆண்டு ஆடி 01 ஆந் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணை உப பிரிவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

2. (அ) சகல கேள்விகளுக்குமான கேள்விப்பத்திரங்களை எல்லா பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கும் முறையான கேள்விப்பத்திரமாக இருத்தல் வேண்டும். கீழ்வரும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிணைப்பணத்தை வைப்புச் செய்தமைக்கான பற்றுச்சீட்டும் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் பெறுமதித் தொகையில் 15% மும் பெறுமானத்திற்கான அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக சம்பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு உறையின் மேல் மூலையில் "இல. ................................. கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி கள்ளுத் தவறணையின் பெயர், இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு 2011.06.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் நாத்தாண்டிய பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். இல்லையாயின் நாத்தாண்டிய பிரதேச செயலாளர் கேள்விப்பத்திர பெட்டியில் இடப்படல் வேண்டும்.

4. 1982.08.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் இல. 207 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2011.06.17 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் சகல கேள்விப்பத்திரதாரர்களும் அவ்விடத்தில் பிரசன்னமாகி இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் கேள்வி கோரப்படாத கள்ளுத் தவறணைகள் மீண்டும் 2011.06.30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கோரப்படும் அன்றைய தினம் கேள்விகள் யாவும் வர்த்தமானி விதிகளுக்கு அமையவே இடம்பெறும்.

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். எம். எல். சந்திரசிரி,
பிரதேச செயலாளர்,
நாத்தாண்டி.

எனது இல. நா/ஆ/05/06/02,
பிரதேச செயலகம்,
நாத்தாண்டி.
2011.05.19.

**அட்டவணை**

| தொடர் இல. | பகுதி | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப்பணம் ரூ. ச. |
|---|---|---|---|---|
| 01 | நாத்தாண்டி | மூதுகட்டுவ | 2011.06.17 மு. ப. 10.00 மணி | 1,000.00 |
| 02 | நாத்தாண்டி | கட்டுநேரிய | 2011.06.17 மு. ப. 10.00 மணி | 1,000.00 |

6-77

## முந்தல் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2011/2012

2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும்,

2. முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள வருமான அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இட்டு இடதுபக்கத்தில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு:

"........................................ இலக்கமுள்ள ........................................ கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத் தவறணை கேள்விப்பத்திரம் 2011.06.09 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக முந்தல் பிரதேச செயலாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் முந்தல் பிரதேச செயகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இடவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2011.06.09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் முந்தல் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஆர். எம். மலிக்,
பிரதேச செயலாளர்,
முந்தல்.

பிரதேச செயலகம்,
முந்தல்,
2011, மே 19.

### அட்டவணை

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவணை கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப்பணம் |
|---|---|---|---|---|---|
| முந்தல் | முந்தல் | மு. ப. 11.00 மணி | பி. ப. 2.00 மணிக்கும் | மு. ப. 10.00 மணி 2011.06.09 | 1,000 0 |
| | | பி. ப. 5.00 மணி | இரவு 8.00 மணிக்கும் | | |
| முந்தல் | மதுரங்குளி | மு. ப. 11.00 மணி | பி. ப. 2.00 மணிக்கும் | மு. ப. 10.00 மணி 2011.06.09 | 1,000 0 |
| | | பி. ப. 5.00 மணி | இரவு 8.00 மணிக்கும் | | |
| முந்தல் | முக்குத் தொடுவாவ | மு. ப. 11.00 மணி | பி. ப. 2.00 மணிக்கும் | மு. ப. 10.00 மணி 2011.06.09 | 1,000 0 |
| | | பி. ப. 5.00 மணி | இரவு 8.00 மணிக்கும் | | |
| முந்தல் | உடப்பு | மு. ப. 11.00 மணி | பி. ப. 2.00 மணிக்கும் | மு. ப. 10.00 மணி 2011.06.09 | 1,000 0 |
| | | பி. ப. 5.00 மணி | இரவு 8.00 மணிக்கும் | | |

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

லக்மினி ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 2011.04.18 ஆந் திகதி இல. பீவீ 78360 இன்கீழ் கூட்டிணைக்கப்பட்டது.

பதிவு முகவரி : இல. 49, நொறிஸ் கெனல் றோட், கொழும்பு 10

கம்பனிச் செயலாளர்.

6-80

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : நேச்ச ரைஹ்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 78519
பதிவுத் திகதி : 2011.04.27
பதிவு முகவரி : இல. 42/2, மெயின் வீதி, பத்தரமுல்லை

பணிப்பாளர்.

6-17

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழான பகிரங்க அறிவித்தல்

கம்பனியின் பெயர் : எல் ஓ எல் சீ பெக்டர்ஸ் லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீபி 4633
கம்பனியின் முகவரி : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய

சீ. எஸ். எமானுவல்,
கம்பனிச் செயலாளர்.

2011, ஏப்பிறல் 11.

6-75

---

### அற்றோணித் தத்துவப்பத்திரம் இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பத்தரமுல்லை, ஜயவடனகமவில் இல. 4/பீ/100 இல் வசிக்கும் அடையாள அட்டை இல. 651720265V க்கு உரிய வட்டவலகெதர சிசிர சமந்த ஹேரத் பண்டார ஆகிய நான், மேற்படி இலங்கைக் குடியரசில் பத்தரமுல்லை, ஜயவடனகமவில் இல. 4/பீ/ 100 ஐச் சேர்ந்த (அடையாள அட்டை இல. 428202236V க்கு உரிய) மஹகுருகே நந்தாவதீ என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு அதுலசிறி ரணகலவினால் உறுதிப்படுத்தப்பட்ட 1996, மே மாதம் 5 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணி தத்துவ காரியங்களை மேம்படுத்துவதற்கு எனது அற்றோணியாக நியமித்ததை இத்தால் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கி விட்டேன் என இத்தால் இலக்கம் 295 இனால் அறியத்தருகின்றேன்.

மேற்கூறப்பட்ட அற்றோணி அதிகாரத்தின் விதிகளின்கீழ் இதன் பின்னர் எந்தவொரு நடவடிக்கைகளும் நான் பொறுப்பாளியல்ல என்பதை அறியப்படுத்துகிறேன்.

வட்டவலகெதர சிசிர சமந்த ஹேரத் பண்டார.

6-74

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நிமித்தம் கீழ்வரும் கம்பனிகளின் பதிவுசெய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : மிட்டர இவென்ட் மெனேஜ்மென்ட் குரூப் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 78482
கம்பனி பதிவுசெய்யப்பட்ட திகதி : 26.04.2011
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 25, 3 ஆவது பிளவர் மில் பேஸ்ட்ட லேன், கொழும்பு 3

பினான்சியல் அன்ட் பிசினெஸ் அசோசியேட்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

6-73/1

---

### டெக்ஸ் நைன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 16276 கடன் கொடுனர் கூட்டத்திற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு கடன்பட்டோர் என்ற வகையில் பொதுக்கூட்டம் ஒன்று 2011, மே மாதம் 16 ஆந் திகதிய இல. 1-3 ஆம் குறுக்கு ஒழுங்கை, பொருப்பன, இரத்மலானை என்னும் இடத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் தீர்மானம் பெற்றுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பினான்சியல் அன்ட் பிஸ்னெஸ் அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
டெக்ஸ் நைன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

6-73/2

## டெக்ஸ் நைன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 16276 கடன் கொடுனர் கூட்டத்திற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காணியின் கடன் கொடுனர்களுக்கான கூட்டம் 2011, மே மாதம் 16 ஆந் திகதி (விசேட ஏற்பாடுகள்) இல. 1, 3 ஆம் குறுக்கு ஒழுங்கை, பொருப்பன, இரத்மலானை என்னும் இடத்தில், தற்போது இல. 453/1, முதலாம் மாடி, ஹெவ்லொக் வீதி என்ற முகவரியில் கம்பனியின் மேற்படி தேவேந்திரன் பெனட் சவரிமுத்து என்பவர் காரணமானது கம்பனி முடிவுறுத்தப்படும் காரணியாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பினான்சியல் அன்ட் பிஸ்னெஸ் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
டெக்ஸ் நைன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

6-73/3

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(2) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பழைய பெயர்* : ஜனதா பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் புதிய பெயர்* : ஜே எப் அன்ட் ஐ பெக்கேஜிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 9457
*கம்பனி பதிவுத் திகதி* : 2011.04.27
*கம்பனி பதிவு விலாசம்* : இல. 321, கடுவெல வீதி, கொஸ்வத்தை, தலங்கம

ஹேமந்த ஸனத் தென்னகோன்,
கம்பனிச் செயலாளர்.

இல. 295ஈ, புவக்கஹதெனிய வீதி,
ஹோகந்தர.

6-72

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : என்பிடபிள்யூ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுத் திகதி* : 2011, பெப்புருவரி 24
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 75743
*பதிவு முகவரி* : இல. 217, ஸ்டேன்லி திலக்கரத்ன மாவத்தை, நுகேகொடை

*கம்பனியின் பெயர்* : வீவீஎம் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுத் திகதி* : 2011, பெப்புருவரி 01
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 76916
*பதிவு முகவரி* : இல. 166டி, ஹல்ஸ்டோப் வீதி, கொழும்பு 12

*கம்பனியின் பெயர்* : த டிஜிட்டல் குரூப் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுத் திகதி* : 2011, பெப்புருவரி 25
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 77437
*பதிவு முகவரி* : இல. 662, டேசிங்கே மாவத்தை, பலவத்த, பத்தரமுல்லை

*கம்பனியின் பெயர்* : கப்லோ ட்றேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுத் திகதி* : 2011, மாச்சு 16
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 77806
*பதிவு முகவரி* : இல. 662/5ஏ, ஸத்சேவா மாவத்தை, விலஹேன, கோனவெல

*கம்பனியின் பெயர்* : வோக்னர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுத் திகதி* : 2011, பெப்புருவரி 08
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 77025
*பதிவு முகவரி* : இல. 153, மகா வித்தியாலய மாவத்தை, கொழும்பு 13

*கம்பனியின் பெயர்* : சிலோன்சொப்ட் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுத் திகதி* : 2011, சனவரி 10
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 76479
*பதிவு முகவரி* : இல. 36, கிருள வீதி, கொழும்பு 05

ஷாட் பிசினெஸ் சிஸ்டெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 141/3, வொக்ஸோல் வீதி,
கொழும்பு 2.

6-71

# ஏல விற்பனைகள்

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, தாசியபற்று, கட்டுநாயக்க-சீதுவை நகரசபை எல்லைகளுக்குள் கட்டுநாயக்கவில் அமைந்துள்ளதும் நீர்கொழும்பு வீதி, வரிமதிப்பு இல. 1265/27 ஐக் கொண்டதும் ''அம்பகஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜே. எம். ஜீ. டயஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1983, ஒகத்து 24 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 361/83 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச் செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 16.25பே.)***

***டபிள்யூ. ஜே. எம். ஜீ. டயஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990, பெப்புருவரி 19 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 361/83 இல் குறிப்பிடப்பட்ட துண்டுகள் 3ஏ மற்றும் 3பி மற்றும் டபிள்யூ. ஜே. எம். ஜீ. டயஸ் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1990, பெப்புருவரி 19 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1394பி/90 இல் குறிப்பிடப்பட்ட துண்டு டி என குறிப்பிடப்பட்ட வீதி ஒதுக்குகள் மீதும் வழியேயுமான வழியுரிமையுடன் சேர்த்து***

**ஏல விற்பனை**

*(கடப்பாடுடையவரான களுத்தற கோறளளாகே தொன் தினுக்க கிளரன்ஸ் ஹேமல் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2010, பெப்புருவரி 17 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1888 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்கள்.)*

***ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.-*** *கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வீதி வழியே நீர்கொழும்பு நோக்கி புனித செபஸ்தியன் வீடமைப்பு திட்டம் வரை ஏறக்குறைய 30 கிலோ மீற்றர் (விமான நிலைய வீதிக்கு இப்பால் ஏறக்குறைய 2.3 கிலோ மீற்றர்) சென்று கிராமோதய மாவத்தைக்கு இடப்பக்கம் திரும்பி, ஏறக்குறைய 100 மீற்றர் செல்லவும். பின்னர் 10 அடி அகல உட்புகு வீதிக்கு வலப்பக்கம் திரும்பி இவ்வாதனத்தை அடைவதற்கு ஒரு சில மீற்றர்கள் செல்லவும்.*

*பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2010, யூன் 29 ஆந் திகதி முறையே மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.-*** *2011.05.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய ''டெய்லி நியூஸ்'', ''லக்பிம'' மற்றும் ''சுடர் ஒளி'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு செய்யும் விதம்.-*** *பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;*
*(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;*
*(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் ) ;*
*(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;*

*கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும்.*

*உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், ''கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சிரேட்ட முகாமையாளர் - சட்ட சம்பந்தமானது'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2565573, 2565565.*

*பீ. கே. ஈ. சேனாபதி,*
*நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,*
*மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.*

*இல. 134, பெத்தகான வீதி,*
*கோட்டே.*
*தொலைபேசி இல. : 2873656,077-7672082.*
*தொலைநகல் இல. : 2871184.*

*6-79*

---

**யூனியன் வங்கி ப.வ.க.**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கி என அறியப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

*(நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜீ. ஏ. எல். பீ. தம்மிக அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2009.07.20 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1194 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள ஈடுவைத்தவரான மிஹிந்துகுலசூரிய ஜோசெப் மெரில் பெர்ணான்டோ அவர்களினால் யூனியன் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

*யூனியன் வங்கி ப.வ.க. இன் பணிப்பாளர்கள் சபையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் கீழே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2011, யூலை 05 ஆந் திகதி மு. ப. 11.30 மற்றும் 12.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.*

தீர்மான அறிவித்தலுக்கு.- 2011.03.11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2011.03.13 ஆந் திகதிய ''டெயிலி நியூஸ்'', ''திவயின'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள் அளுத்குறு கோறளை, தாசியபற்று, பிட்டிபனையில் அமைந்துள்ளதும் ''மாவெல'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜே. எம். ஜீ. டயஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1989.03.16 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1246 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டுள்ளதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேலே சொல்லப்பட்ட காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2007.05.19 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 5855ஏ இல் குறிப்பிடப்பட்டு மீள்நிலஅளவை செய்யப்பட்டுள்ளது) இதே காணியின் துண்டு 3 இன் குறுக்கான வீதி ஒதுக்குடன் சேர்த்து.

(விஸ்தீரணம் : இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20பே.))

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள் அளுத்குறு கோறளை, தாசியபற்று, பிட்டிபனையில் அமைந்துள்ளதும் ''மாவெல'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. சீ. எஸ். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1986.09.02 ஆந் திகதியன்று பாகம் பிரிக்கப்பட்டதும் 1984.02.25 ஆந் திகதியன்று நிலஅளவை செய்யப்பட்டதுமான வரைபடம் இல. 38/1984 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2பி என அடையாளமிடப்பட்டுள்ளதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேலே சொல்லப்பட்ட காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2007.05.19 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 5855 இல் குறிப்பிடப்பட்டு மீள்நிலஅளவை செய்யப்பட்டுள்ளது) வரைபடம் இல. 2525 இன் துண்டு 1ஏ இன் குறுக்கான வீதி ஒதுக்குடன் சேர்த்து.

(விஸ்தீரணம் : பதினெட்டு தசம் ஐந்து பேர்ச்சுக்கள்
(0ஏ. 0றூ. 18.5பே.))

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- நீர்கொழும்பு நகர் மத்தியிலிருந்து முன்னக்கரை பாலம்வரை 500 மீற்றர் சென்று, இடப்பக்கம் திரும்பி, நீர்கொழும்பு-பமுனுகமை வீதி வழியே 2.7 கி. மீ. சென்று, அதன் பின்னர், உடனே பிட்டிபனை ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தைத் தொடர்ந்தாற்போலுள்ள தாரிடப்பட்ட வீதிக்கு வலப்பக்கம் திரும்பி, 100 மீற்றர் சென்று, விளையாட்டு மைதானத்தில் வலப்பக்கம் திரும்பி, மெதபிட்டிபனை வீதிக்கு 250 மீற்றர் சென்று, இறுதியாக வீதிக்கான ஒதுக்குக்கு வலப்பக்கம் திரும்பி, வீதிக்கு வலப்பக்கத்தில் அமைந்துள்ள இவ்வாதனத்தை அடைவதற்கு 35 மீற்றர் செல்லவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் ) ;
(4) விற்பனை நிபந்தனைகள் மற்றும் அத்தாட்சிப்படுத்தலை தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணங்கள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;
(6) மொத்த விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இல் வைப்பிலிட வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும். ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

**மேலதிக விபரங்களுக்கு**.- உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், ''கொழும்பு 3, அல்பிரட் பிளேஸ், இல. 15ஏ, யூனியன் வங்கி ப.வ.க. முகாமையாளர்-சட்ட சம்பந்தமானது'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 0112-370870, 0112 274100.

ஹேமசந்திர தலுவத்த,
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்
மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 61/1, பிரகதி மாவத்தை,
பங்களாவத்தை,
கொட்டாவை.
துரித அழைப்பு : 071-4175944, 075-8489378.

6-19

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்ரீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை - 2011

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 03.06.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.05.2011 |
| | | வெள்ளி | 10.06.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.05.2011 |
| | | வெள்ளி | 17.06.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.06.2011 |
| | | வெள்ளி | 24.06.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.06.2011 |
| **யூலை** | .. | வெள்ளி | 01.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.06.2011 |
| | | வெள்ளி | 08.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.06.2011 |
| | | வெள்ளி | 15.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.07.2011 |
| | | வெள்ளி | 22.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.07.2011 |
| | | வெள்ளி | 29.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.07.2011 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 05.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.07.2011 |
| | | வெள்ளி | 12.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.07.2011 |
| | | வெள்ளி | 19.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.08.2011 |
| | | வெள்ளி | 26.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.08.2011 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.